
# தமிழ் தேசிய அரசியலும் புலம்பெயர் மக்களும்

அரசியல் சிந்தனை நூல் வரிசை

25



சி.அ.யோதிலிங்கம்

வெளியீடு
சமூக விஞ்ஞான ஆய்வு மையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சமூக விஞ்ஞான ஆய்வு மையம் மாதம் தோறும் வெளியிடும் அரசியல் சிந்தனை நூல்வரிசையில் 25வது நூலாக சி.அ.யோதிலிங்கம் எழுதிய "தமிழ்த் தேசிய அரசியலும் புலம் பெயர் மக்களும்" என்ற இச் சிறுநூல் வெளிவருகின்றது. இலங்கை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பாக உரையாட வருமாறு புலம்பெயர் மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்ற நிலையில் புலம்பெயர் மக்களின் வகிபாகம் பற்றி புரிந்து கொள்வதற்கு இச் சிறுநூல் பெரிதும் உதவும் என நம்புகின்றோம்.

தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்தவரை அடிப்படை சக்திகளாக இருப்பவர்கள் தாயகத்தில் வாழ்கின்ற மக்களும் அதன் நீட்சியாக புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற மக்களுமேயாவர். ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய அரசியலை தக்கவைப்பதிலும், பாதுகாப்பதிலும் புலம்பெயர் மக்களின் பங்கு அளப்பரியது.

தமிழ்த் தேசிய அரசியலைத் தக்கவைத்துப் பாதுகாத்தல், இன அழிப்புக்கான சர்வதேச நீதிகோருதல், தாயக மக்களுக்கும் உலகத் தமிழர்களுக்குமிடையே பாலமாக விளங்குதல், தாம் வாழும் நாடுகளில் அரசியல் சமூகமாக எழுச்சியடைந்து வாழும் நாடுகளின் அரசுகளுக்கு அழுத்தம் கொடுத்தல், உலகளாவிய வகையில் அரசியல் போராட்டங்களை நடாத்துதல், பொருளாதார ரீதியாக தாயக மக்களுக்கு உதவுதல் என தமிழ்த் தேசிய அரசியலில் புலம்பெயர் மக்களின் வகிபங்கு உன்னதமானது.

இச் சிறுநூல் தமிழ்த் தேசிய அரசியலில் புலம்பெயர் மக்களின் முக்கியத்துவத்தையும் எதிர்காலத்தில் அவர்கள் ஆற்றவேண்டிய பணிகளையும் சுருக்கமாக எடுத்துரைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர் மக்களின் பணிகளை ஒழுங்கமைப்பதற்கும், தாயக மக்களுக்கும் புலம்பெயர் மக்களுக்குமான உறவினை கட்டியெழுப்புவதற்கும் இச் சிறுநூல் பெரிதும் உதவும் என்று நம்புகின்றோம்.

வாசகர்கள் எமது ஏனைய நூல்களுக்கு தந்த ஆதரவினைப் போல இந்த நூலுக்கும் தருமாறு மிகவும் தாழ்மையாக வேண்டுகின்றோம்.

நன்றி

சமூக விஞ்ஞான ஆய்வு மையம்
28,செம்மணி வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிணக்கணச் செயற்பாடுகளை உள்ளகப் பொறிமுறையின் அடிப்படையில் செயற்படுத்துவதற்கு வருமாறு ஜனாதிபதி கோத்தபாய புலம்பெயர் மக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார். இது தாயக மக்கள் மத்தியிலும், புலம்பெயர் மக்கள் மத்தியிலும் பலத்த வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியுள்ளது. இந்த அழைப்பு தொடர்பாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதை விட எட்டு புலம் பெயர் அமைப்புக்கள் இணைந்தும் கூட்டாக ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளன.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அறிக்கையில் ஜனாதிபதி கோத்தபாயவிற்கு இலங்கைத்தீவில் அமைதியைக் கொண்டு வருவதில் உண்மையான அக்கறை இருந்தால் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் ஹுசைன் 2015 இல் பரிந்துரைத்தபடி ரோம் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டும், அரசியல் கைதிகளை எவ்வித நிபந்தனையில்லாமல் விடுதலை செய்ய வேண்டும், அரசியல் தீர்வு தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் அதன் பின்னர் பேச்சுவார்த்தைக்கு வரத் தாயர் எனக் கூறியிருக்கிறது.

எட்டு புலம்பெயர் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் கனடியத் தமிழ்த் தேசியப் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, அவுஸ்ரேலிய தமிழ்க் காங்கிரஸ், நோர்வே ஈழத் தமிழர் அவை, அயர்லாந்து தமிழர் பேரவை, தென்னாபிரிக்கா அமைதி மற்றும் நீதிக்கான ஒற்றுமைக்குழு, பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவை, அமெரிக்க தமிழர் செயற்பாட்டுக்குழு என்பன கைச்சாத்திட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேசத் தயார் என்றும் இம் மத்தியஸ்தத்தை அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளில் ஏதாவது ஒன்று வழங்கலாம் அல்லது மூன்றும் கூட்டாக வழங்கலாம் என்றும் அவ் அறிக்கை கூறியிருக்கிறது. பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு முன்னர் அரசியல் கைதிகள் நிபந்தனை இன்றி விடுதலை செய்யப்படல் வேண்டும் என்றும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல் வேண்டும் என்றும் கூறியிருக்கின்றது. இவற்றினூடாக அரசாங்கம் நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும் என்றும் கூறியிருக்கின்றது.

இங்கு புலம்பெயர் தமிழ் மக்களின் அமைப்புக்களையும் , அங்குள்ள செயற்பாட்டு முக்கியஸ்தர்களையும் தடை செய்து விட்டுத்தான் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கிறார் என்பது கவனிக்கத்தக்கது. இதன் மூலம் புலம்பெயர் மக்கள் தவிர்க்க முடியாத சக்திகள் என்பதை அவர் மறை முகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்

புலம்பெயர் மக்கள் தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்த வரை பல வழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாவர். யூதப் புலம்பெயர் சமூகத்தின் முக்கியத்துவம் போல் இல்லாவிடினும் அதனை நோக்கி வளர்ந்துகொண்டிருக்கின்றனர் எனக் கூறக் கூடிய நிலையில் உள்ளனர். இம் முக்கியத்துவங்களுள் முதலாவது 2009க்குப் பின்னர் அதாவது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை தக்கவைத்ததிலும் பாதுகாத்ததிலும் புலம்பெயர் மக்களுக்குரிய பங்காகும். அதுவும் நல்லாட்சி எனக் கூறப்படுகின்ற ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில் இவர்களது பங்கு அளப்பரியதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இக் காலத்தில் தமிழ்த் தலைமைகளை தமது பொக்கற்றுக்குள் வைத்துக் கொண்டு தமிழ்த் தேசிய அரசியலை நீர்த்துப்போகச் செய்வதற்கான நிகழ்ச்சி நிரலை சர்வதேச சக்திகள் என அழைக்கப்படுகின்ற அமெரிக்க-மேற்குலக இந்தியக் கூட்டு நகர்த்தியிருந்தது. அந்த நிகழ்ச்சி நிரலை பலவீனப்படுத்தி தமிழ்த்தேசிய அரசியலின் இருப்பை பாதுகாத்ததில் புலம்பெயர் மக்களுக்கு அளப்பரிய பங்கு உண்டு.

தாயகத்தில் அதனைப் பாதுகாக்கும் செயற்பாட்டை ஆரம்பத்தில் முன்னெடுத்தவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தான். பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் அதற்கான கோட்பாட்டுத் தளத்தையும், செயற்பாட்டுத் தளத்தையும் கஜேந்திரகுமார் உருவாக்கியிருந்தார். இதன் தொடர்ச்சியாக இதனை மக்கள் மயப்படுத்தும் பணியை தமிழ் மக்கள் பேரவை மேற்கொண்டது. நீதியரசர் விக்கினேஸ்வரனின் பங்களிப்பு இதில் வலுவானதாக இருந்தது. தாயகத்தில் செயற்பட்ட இச் சக்திகளுக்கும் புலம்பெயர் சக்திகளுக்கும் இடையேயான கூட்டுத்தான் இதனைப் பாதுகாத்தலில் முக்கிய பங்கு வகித்தது எனலாம். இச் சக்திகளின் வலுவான கூட்டுச் செயற்பாடுதான் கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தனித்த ஓட்டத்தையும் பலவீனப்படுத்தியிருந்தது. கூட்டமைப்பின் மொத்த வியாபாரத்தையும் தடுத்திருந்தது.

இரண்டாவது முக்கியத்துவம் தமிழ் மக்களது உலகளாவிய அரசியல் போராட்டமாகும். யாழ் பல்கலைக் கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி தகர்க்கப்பட்டமைக்கான போராட்டம் பொத்துவில் முதல் பொலிகண்டிவரையிலான போராட்டம் என்பன வளர்ச்சியடைந்தமைக்கு புலம்பெயர் மக்களே பாரிய பங்களிப்பினை வழங்கியிருந்தனர். இன்று கோத்தபாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் மிகவும் அச்சப்படுகின்ற விடயம் இந்த உலகளாவிய அரசியல் போராட்டம் தான்.

மூன்றாவது முக்கியத்துவம் இன அழிப்புக்கு சர்வதேச நீதிகோரும் செயற்பாட்டில் புலம்பெயர் மக்களின் பங்களிப்பாகும். இந்த விவகாரத்தில் தாயக மக்களின் பங்களிப்பு பெரிதாக இருந்தது எனக் கூறிவிட முடியாது. அதில் அதிகம் பங்களிப்பை மேற்கொண்டவர்கள் புலம்பெயர் மக்களே. ஜெனிவாவில் அவர்களுடைய பங்களிப்பு அளப்பரியதாக இருந்தது. சர்வதேச வல்லுனர்களைக் கொண்டு பிரட்மன் விசாரணையை நடத்தியதிலும் இவர்கள் முன்னிலை வகித்தனர்.

நான்காவது புலம்பெயர் நாடுகளில் ஒரு அரசியல் சமூகமாக புலம்பெயர் மக்கள் மாறி வருவதாகும். யூத சமூகம் போல இல்லாவிடினும் தாம் வாழும் நாடுகளின் ஆட்சி அதிகாரக் கட்டமைப்பில் கணிசமான செல்வாக்கினை இவர்கள் செலுத்துகின்றனர். கனடாவில் இது அதிகமாக உள்ளது எனலாம். புலம்பெயர் நாடுகளிலேயே அதிகளவு புலம்பெயர் தமிழர்கள் வாழ்வது கனடாவில் தான். அங்கு தமிழ் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது நிரந்தரமாகிட்டது. மத்திய பாராளுமன்றத்திற்கு ஹரி ஆனந்தசங்கரி மூன்றாவது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். ஒன்ராரியோ மாகாண பாராளுமன்றத்தில் லோகன் கணபதியும், விஜய் தணிகாசலமும் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த மாதம் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மேலும் இரு தமிழர்கள் இரண்டாம் நிலைக்கு வந்துள்ளனர். இங்கு ஒரு கட்சியில் மட்டுமல்ல பிரதான கட்சிகள் அனைத்திலும் தமிழர்கள் செல்வாக்குச் செலுத்தும் நிலை காணப்படுகின்றது. ஹரி ஆனந்தசங்கரி லிபரல் கட்சி சார்பில் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகன் கணபதியும், விஜய் தணிகாசமும் கன்சர்வேடிவ் கட்சியின் சார்பில் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

கனடாவுக்கு வெளியே நோர்வேயில் கம்ஷாயினி குணரட்னம் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். பல இனங்கள் செறிந்து வாழும் தொகுதியில் இருந்து அனைத்து இன மக்களின் ஆதரவுடன் அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என கூறப்படுகின்றது. தமிழ்த்தேசிய சக்திகளுக்கு இவர் தொடர்பாக பல விமர்சனங்கள் இருந்தாலும் இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இவரது வெற்றி மகிழ்ச்சியளிக்கக் கூடியதே.

பிரித்தானியாவிலும் தமிழ் மக்கள் வலிமையான நிலையான நிலையில் உள்ளனர் எனக் கூறலாம். அங்குள்ள பிரதான கட்சிகளான தொழிற் கட்சியிலும், கன்சர்வேடிவ் கட்சியிலும் தமிழ் மக்களுக்கு செல்வாக்கு உண்டு. பல தொகுதிகளில் அங்கு வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பவர்களாக தமிழ் மக்களே உள்ளனர். இவை புலம்பெயர் தமிழ் மக்களுக்கு வெளியேயான அந்நாட்டின் அரசியல் செயற்பாட்டில் புலம்பெயர் தமிழ் மக்கள் வளர்ச்சியடைந்து வருகின்றனர் என்பதையே காட்டுகின்றது.

ஐந்தாவது முக்கியத்துவம் புலம்பெயர் மக்கள் தாயக மக்களுக்கும் உலகத்தமிழர்களுக்குமிடையே ஒரு இணைப்புப் பாலமாக இருக்கின்றமையாகும். இந்தியா, மலேசியா, தென்னாபிரிக்கா , சிங்கப்பூர் , மொறீசியஸ் போன்ற நாடுகளில் வாழும் தமிழக வம்சாவழித் தமிழர்களுக்கும் புலம் பெயர் தமிழர்களுக்குமிடையே நெருக்கமான தொடர்பு உண்டு. தஞ்சாவூரில் முள்ளிவாய்க்கால் முற்றம் கட்டப்பட்டமைக்கும் மொறீசியஸ்சில் முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டமைக்கும் புலம் பெயர் மக்களே காரணமாவார். இந்தியாவில் தமிழ் நாட்டிற்கு வெளியே பல்வேறு மாநிலங்களில் வாழும் தமிழ் மக்களுடனும் நெருக்கமான தொடர்பு புலம் பெயர் மக்களுக்கு உண்டு.

ஆறாவது முக்கியத்துவம் புலம்பெயர் மக்களின் பொருளாதார வலிமையாகும். இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்ட நிதியை விடப் புலம் பெயர் மக்களின் நிதிப்பலம் உயர்வானது. போர்க்காலத்தில் தமிழ் மக்களை பட்டினியிலிருந்து பாதுகாத்தது புலம்பெயர் மக்களின் உதவிகள் தான். தற்போதும் கூட போரினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் அவர்களின் பங்களிப்பு உன்னதமாக உள்ளது. பலர் சிறந்த தொழிலதிபர்களாகவும் சிறந்த வர்த்தகர்களாகவும் உள்ளனர். வர்த்தகத்தில் சிறப்புப் தேர்ச்சினைக்கூட பெற்றிருக்கின்றனர் எனக் கூறலாம். கனடா ஸ்காபுறோவில் உள்ள சிறந்த தமிழ் சாப்பாட்டுக்கடைகள் போல கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கூடக் கிடையாது.

புலம் பெயர் மக்களின் இந்த முக்கியத்துவங்கள் தான் இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவர்களைத் தவிர்க்க முடியாத சக்தி ஆக்கியிருக்கின்றது. 2009 க்குப் பின்னர் 11 வருட கால அனுபவத்தில் இலங்கை அரசாங்கம் இதனை நன்றாகவே புரிந்து கொண்டிருக்கின்றது. யானையின் காதுக்குள் சென்றிருக்கும் எறும்புக் கூட்டங்கள் போல வலிமையான குடைச்சல்களை இலங்கை அரசாங்கத்திற்கு அவர்கள் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றனர். முள்ளிவாய்க்காலுடன் அனைத்தும் முடிந்து விட்டது என நினைத்துக் கொண்டிருந்த ஆட்சியாளர் களுக்கு போர்க்காலத்தை விட கடினமான நிலை உருவாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது என்ற கலக்கம் உருவாகியுள்ளமைக்கும் இவர்களின் முக்கியத்துவம் தான் காரணம்.

தமிழ்த்தேசிய அரசியலில் தவிர்க்க முடியாத வலுவான சக்திகள் புலம் பெயர் மக்கள். இந்த முக்கியத்துவத்தை புலம் பெயர் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொண்டு செயற்படுவதற்கு அவர்கள் தயாராக வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் தொடர்பாக புலம்பெயர் மக்களுக்கு பல பணிகள் காத்திருக்கின்றன. இதில் முதலாவது புலம்பெயர் அமைப்புக்கள் தங்களுக்கிடையே ஒருங்கிணைந்த அரசியலைப் பின்பற்றுவதாகும். தங்களுக்கிடையே அவர்கள் ஜனநாயக ரீதியான உரையாடலை நடாத்தி ஒருங்கிணைவுக்கான பொதுப்புள்ளியைக் கண்டுபிடித்து அதனை பலப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

வலுவான ஐக்கிய முன்னணி ஒன்றின் மூலமே ஒருங்கிணைந்த அரசியலை வெற்றிகரமாக முன்னெடுக்கலாம். இதற்கு அரசியல் நிலைப்பாட்டில் உறுதித்தன்மை, அதற்கான வழிவரைபடம், சமபங்காளர் என்ற அந்தஸ்து அமைப்புப் பொறிமுறை என்பன வலுவாக இருத்தல் அவசியமானதாகும். தேர்தல் அரசியலை மேற்கொள்ள வேண்டிய தேவை புலம்பெயர் மக்களுக்கு இல்லாதபடியால் மேற்கூறிய பண்புகளின் அடிப்படையில் ஐக்கிய முன்னணி ஒன்றைக் கட்டியெழுப்புவது கடினமாக இருக்கப்போவதில்லை. அரசியல் இலக்கு, வழிவரைபடம் என்பவற்றில் உடன்பாடு கண்டறியப்பட்டு அதற்கான உடன்படிக்கை ஒன்றை வரைவது செயற்பாடுகளை முன்னெடுப்பதில் ஆரோக்கியமான நிலையைக் கொண்டு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்த் தேசிய அரசியல் வெற்றியடைவதற்கு நிலத்திற்கும் புலத்திற்கும் தமிழகத்திற்கும் இடையே ஒருங்கிணைந்த அரசியல் அவசியமானதாகும். எனவே புலம் பெயர் நாடுகளில் உருவாக்கப்படுகின்ற ஒருங்கிணைந்த அரசியலை தாயகத்திற்கும் தமிழகத்திற்கும் விஸ்தரிக்க வேண்டும். தாயகத்திற்கு விஸ்தரிக்கின்ற போது தாயக மக்கள் எதிர்நோக்குகின்ற சட்டத் தடைகளை புலம் பெயர் மக்கள் கவனத்திலெடுப்பது அவசியம். தனிநாட்டுக் கோரிக்கைக்கு எதிரான 6 வது திருத்தச் சட்டமும் தமிழீழ விடுதலைப்புலிகள் தடைசெய்யப்பட்ட நிலையும் தாயக மக்களின் செயற்பாடுகளுக்கு எல்லைகளை வகுத்துள்ளன. தாயக மக்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுக்க முடியாது. அதே வேளை தமிழீழ விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருப்பதனால் இதனை மையப்படுத்தியும் செயற்பட முடியாது.

எனவே புலம் பெயர் மக்கள் தாயகம் சந்திக்கின்ற சட்டத்தடைகளை கவனத்தில் எடுத்து தமது அரசியல் நிலைப் பாடுகளையும் அமைப்புப் பொறிமுறையையும் வகுத்துக் கொள்ளுதல் அவசியமானதாகும். நிலமும் புலமும் ஒருங்கிணைந்த அரசியலுக்குள் வராவிட்டால் உலகம் தழுவிய வகையில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பது கடினமாகவே இருக்கும்.

அரசியல் இலக்கு தொடர்பாக சுயநிர்ணய உரிமையுடைய சமஸ்டி என்பதை முன்வைத்தால் நிலமும் புலமும் இணைந்து செயற்படக்கூடிய நிலை உருவாகும். அரசியல் இலக்கு தொடர்பாக கொள்கை அடிப்படையில் தேச அங்கீகாரம், இறைமை அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை அங்கீகாரம், சுயநிர்ணயமுடைய சமஸ்டி ஆட்சி அங்கீகாரம் என்பவற்றை முன்வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோட்பாட்டிற்கு அரசியல் யாப்பு சட்ட வடிவம் கொடுக்கும் போது வடக்கு கிழக்கு இணைந்த அதிகார அலகு சுயநிர்ணயமுடைய சுயாட்சி அதிகாரங்கள், மத்திய அரசில் ஒரு தேசமாகப் பங்குபற்றுவதற்குரிய பொறிமுறை, சுயாட்சி அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பவற்றை முன்வைத்தல் அவசியமானதாகும்.

மேற்கூறிய அரசியல் இலக்கினை அடைவதற்கான வழிவரைபடத்தைப் பொறுத்த வரை தமிழ் அரசியல் இலக்கிற்கான அரசியல் நியாயப்பாடுகளை புலமை ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் தொகுத்து தாயக மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அதனைப் பேசு பொருளாக்கல், அரசியல் கட்சிகளையும் பொது அமைப்புக் களையும் இணைத்த தேசிய அரசியல் இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்புதல், சேமிப்பு சக்திகளான உலகத் தமிழர்களையும், நட்பு சக்திகளான உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் இணைத்துக் கொள்ளுதல், இலங்கைத்தீவை மையமாக முன்வைத்து செயற்படும் பூகோள அரசியலில் பங்காளிகளாக மாறுதல், சமூகமாற்ற அரசியலை முன்னெடுத்தல், சிறீலங்கா அரசின் ஆக்கிரமிப்புக்களை தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்குதல் , மக்கள் பங்கேற்பு அரசியலை தொடக்கிவைத்தல் , அரசின் அதிகாரக் கட்டமைப்புக்கு சமாந்தரமாக தமிழர்களுக்கென ஒரு அதிகாரக் கட்டமைப்பை உருவாக்குதல். கிழக்கைக் கையாள்வதற்கு பொருத்தமான மூலோபாயங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்து செயற்படுத்துதல் என்பன உள்ளடங்கி இருத்தலை உறுதிப் படுத்துவது அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது பணி புலம் பெயர் நாடுகளில் வாழும் புலம்பெயர் மக்கள் ஒரு கட்டுறுதியான அரசியல் சமூகம் என்பதை மேலும் வலுப்படுத்திக் கொள்ளுதலாகும். கட்டுறுதியான அரசியல் சமூகம் என்பது புலம்பெயர் மக்கள் அரசியல் இலக்கிலும் கொள்கையிலும் உறுதியான நிலையில் கூட்டாக நின்று கொண்டு தமக்கென அரசியல் பிரதிநிதிகளை புலம்பெயர் நாடுகளில் இடம் பெறும் தேர்தல் மூலம் தெரிவு செய்து அந்நாட்டின் அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலைக் கொண்ட சமூகமாகும். கட்டுறுதியான அரசியல் சமூகம் என்ற நிலையை அடைவதற்கு முதலில் அச்சமூகம் ஒரு பண்பாட்டுச் சமூகமாக எழுச்சியடைய வேண்டும். புலம் பெயர் மக்கள் தமிழ் மொழியையும் கலாச்சாரத்தையும் வலுவாகப் பேணுகின்ற போதே ஒரு பண்பாட்டுச் சமூகமாக எழுச்சியடைய முடியும்.

புலம் பெயர் மக்களைப் பொறுத்தவரை ஆங்கிலம் பேசுகின்ற நாடுகளில் வாழ்கின்ற புலம் பெயர் மக்கள் பண்பாட்டுச் சமூகமாக எழுச்சியடைவதில் பலவீனமான நிலை காணப் படுகின்றது. ஆங்கில மொழியை மட்டும் பேணுவதற்கு புதிய தலைமுறை முற்படுவதே இதற்குக் காரணமாகும். இதனால் கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளில் தற்போது ஓரளவிற்கு அரசியல் சமூகமாக இருக்கின்ற புலம்பெயர் மக்கள் இதனைத் தொடர்ந்தும் பேணுவார்களா? என்பதில் சந்தேகம் ஏற்படத்தொடங்கியுள்ளது. இதற்கு மாறான நிலை ஆங்கிலம் பேசாத நாடுகளான ஜேர்மனி, ஒல்லாந்து, சுவிஸ்லாந்து, டென்மார்க், நோர்வே போன்ற நாடுகளில் நிலவுவது சற்று மகிழ்ச்சி அளிக்கக் கூடியதாக இருக்கின்றது. அங்கு புதிய தலைமுறை தமிழ் மொழியை நன்றாக எழுதப்பேச தெரிந்திருப்பதோடு பண்பாட்டுப்பேணுகையிலும் வலுவான அக்கறையுடையவர்களாக இருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாபிரிக்காவில் தமிழக வம்சாவழித்தமிழர்கள் மூன்றாவது பெரிய இனமாக இருக்கின்றனர். கறுப்பின மக்களுக்கும் வெள்ளை இன மக்களுக்கும் அடுத்தபடியாக எண்ணிக்கையில் அதிகமாக தமிழக வம்சாவழித் தமிழர்களே உள்ளனர். ஆனாலும் அவர்கள் அங்கு ஒரு பண்பாட்டுச் சமூகமாக எழுச்சியடையவில்லை. இதனால் அரசியல் சமூகமாகவும் வளரவில்லை. இந்த நிலைமை புலம் பெயர் மக்களுக்கும் வந்துவிடக் கூடாது. மலேசியாவில் தமிழக வம்சாவழித் தமிழர்கள் சிறந்த பண்பாட்டுச் சமூகமாகவும் அரசியல் சமூகமாகவும் வளர்ச்சி பெற்றுள்ளனர்.

புலம்பெயர் மக்கள் எண்ணிக்கையில் குறைந்தளவினரான வாழும் நாடுகளில் கூட்டு அரசியல் சமூகமாக வாழ்வதில் அக்கறை கொள்வது நல்லது. பண்பாட்டுத் தளத்தில் தமிழர்களாக வாழ்கின்ற அதேவேளை அரசியல் தளத்தில் கூட்டடையாளத்தைப் பேணலாம். இந்த கூட்டடையாளத்தினை அங்கு வாழும் ஏனைய புலம்பெயர் மக்களுடன் இணைந்து உருவாக்கிக் கொள்வதே ஆரோக்கியமானது. நோர்வேயில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட ஹம்சாயினி குணரத்தினம் பல்லின மக்கள் வாழும் தொகுதியிலிருந்தே தெரிவு செய்யப்பட்டார் என்பதை இங்கு கவனத்தில் கொள்வது நல்லது.

மூன்றாவது பணி புலம் பெயர் மக்கள் தாயகத்தில் நிலவும் கட்சி அரசியல் முரண்பாடுகளுக்குள் மாட்டுப்படாமல் தமது பணிகளை முன்னெடுப்பதாகும். தாயகத்தில் ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவதற்கு தடங்கலாக இருப்பது இங்குள்ள கட்சி அரசியலும், தேர்தல் அரசியலுமேயாகும். கட்சி அரசியலுனூடாக வினைத்திறனுடன் தேச அரசியலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுக்க முடியாது. கட்சிகளின் பிரதான இலக்கு தேர்தலும் அதன் வழி கிடைக்கும் பதவிகளும் தான். அவற்றின் அனைத்து நடவடிக்கைகளும் அதனை மையப்படுத்தியே இருக்கும். தேச அரசியல் அவற்றிற்கு இரண்டாம் பட்சமானதே! தாயகத்தில் தேச அரசியல் தேங்கி நிற்பதற்கு கட்சி அரசியலும், தேர்தல் அரசியலுமே, பிரதான காரணங்களாகும். புலம் பெயர் மக்களும் அதற்குள் மாட்டுப்பட்டால் தமிழ்த்தேசிய அரசியல் மேலும் மேலும் தேங்கக்கூடிய நிலையே ஏற்படும்.

நான்காவது பணி தமிழ் மக்களுக்குக்கென ஒரு வெளிநாட்டுக் கொள்கையையும் அதனை நடைமுறையில் செயற்படுத்துவதற்கான ராஜதந்திர லொபியையும் உருவாக்குவதாகும். வெளிநாட்டுக் கொள்கை என்பது ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் உறவுகளைப் பேணுவதற்கு அடிப்படையாக இருக்கின்ற கொள்கையாகும். தேசிய நலனே வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையாக இருக்கும். இந்த வெளிநாட்டுக் கொள்கை நாடுகளுக்கு மட்டும் அவசியமானதல்ல. விடுதலைக்காக போராடும் தேசிய இனங்களுக்கும் அவசியமானதே! துரதிஸ்ட வசமாக தமிழ்த் தரப்பில் இதற்கான அக்கறை மிகக் குறைவு. தமிழ்த் தேசிய அரசியல் சர்வதேச மட்டத்திற்கு சென்ற பின்னரும், இலங்கைத் தீவின் அரசியலை தீர்மானிப்பதில் பூகோள அரசியல் முக்கியத்துவம் பெற்ற நிலையிலும் இந்த அக்கறையீனம் கவலைக்குரியதே! தமிழ் அரசியல் சக்திகளின் சர்வதேசம் தொடர்பான அணுகுமுறை பலவீனமாக இருப்பதற்கும் வல்லரசுகள் பகடைக் காய்களாக தமிழ் மக்களை பயன்படுத்துவதற்கும் இதுவே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்த குறைபாட்டை தீர்த்துக்கொள்ளும் ஆற்றல் புலம்பெயர் மக்களுக்கே உண்டு. அதற்கான அறிவுத்துறை வளமும், பொருளாதார வளமும் புலம்பெயர் மக்களிடம் தான் உண்டு. எனவே புலம்பெயர் மக்கள் உடனடியாக வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதற்கும் அதற்கான இராஜ தந்திரிகளை பயிற்சிப்பதற்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஐந்தாவது தமிழ் மக்களுக்கென பொருளாதாரக் கொள்கை ஒன்றை உருவாக்குவதாகும். இது மிகவும் அவசியமானது. தாயகத்தில் வாழ்கின்ற பலர் அபிவிருத்தி மாயையில் சிக்குப்பட்டுள்ளனர். இன்று சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆக்கிரமிப்புக் கருவிகளாக இருப்பதனை இங்கு பலர் கவனிப்பதில்லை.

தமிழ் மக்கள் ஒரு அரசியல் தீர்வு வரும் வரை தமிழ்த் தேசிய அரசியல் பொருளாதாரத்திலேயே கவனம் செலுத்த முடியும். அதாவது தமிழ் மக்களின் அரசியல் இலக்கிற்கு பங்களிப்புச் செய்கின்ற பொருளாதாரமே அதுவாகும். சிறிய சிறிய தொழிற்சாலைகளை தமிழ் மக்களின் முதலீடுகளுடன் ஆரம்பிப்பது ஆரோக்கியமானதாகும். பாரிய முதலீட்டுடன் கூடிய தொழில்களை புலம்பெயர் நாடுகளில் கூட்டாகவோ, தனியாகவோ உருவாக்குவது தமிழ் மக்களின் பொருளாதார பலத்தை சர்வதேச ரீதியாக உயர்த்துவதற்கு வழிவகுப்பதாக இருக்கும்.

இவையெல்லாவற்றிற்கும் முதல் நிபந்தனை தமிழ் மக்களுக்கென ஒரு பொருளாதாரக் கொள்கையை உருவாக்குவதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாவது தமிழ் மக்களுக்கென தமிழர் நிதியம் ஒன்றினை உலகளாவிய வகையில் உருவாக்குவதாகும். இது சேர்க்கப் படுகின்ற நிதியினை மையப்படுத்துவதற்கும் உதவிகரமானதாக இருக்கும். யூத அரசியலின் தந்தையாக கருதப்படுகின்ற தியோடர்ஷ்ர்சல் முதலில் உருவாக்கியது. யூத நிதியத்தைத்தான். இந்த நிதியத்தை உருவாக்கும்போது கடந்தகாலத் தவறுகள் உருவாகாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம். பொது நிதியைக் கையாள்வதில் முறைகேடுகள் இடம்பெற்றதாக புலம்பெயர் மக்கள் மத்தியில் தற்போதும் பேசப்படுகின்றது.

இவற்றை விட தமிழ் மக்களுக்கென புலம்பெயர் நாடுகளில் அங்குள்ள பிரதான மொழிகளில் பத்திரிகைகளை நடாத்துதல், தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றை உள்ளடக்கிய அரும்பொருட் காட்சியகம் ஒன்றை உருவாக்குதல், போன்ற பணிகளும் புலம்பெயர் மக்களுக்காக காத்துக்கிடக்கின்றன.

தமிழ்த் தேசிய அரசியலில் புலம்பெயர் மக்களின் வகிபங்கு உன்னதமானது. இதன் முக்கியத்துவத்தை தாயக மக்களும், புலம்பெயர் மக்களும் தர்க்க ரீதியாக புரிந்துகொண்டு செயற்பட்டால் தமிழ்த் தேசிய அரசியலில் உலகமே எதிர்பார்க்காத பாய்ச்சலை நடாத்திக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதுவரை வெளிவந்த நூல்கள்

1. நல்லிணக்க பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணியின் அறிக்கையும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
2. இந்தியாவும் தமிழ் மக்களும். - சி.அ.யோதிலிங்கம்
3. நினைவு கூர்தல் - 2017 - நிலாந்தன்
4. "தமிழ் அரசியலின் இலக்கும் வழிவரைபடமும்" சி.அ.யோதிலிங்கம்
5. மோடியின் இலங்கைப் பயணமும் மலையகமும். சி.அ.யோதிலிங்கம்
6. இந்து சமுத்திரமும் சீனாவும். - கலாநிதி.கே.ரீ.கணேசலிங்கம்
7. வட - கிழக்கு இணைப்பும் முஸ்லீம் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
8. இனப்பிரச்சினைத் தீர்வில் சர்வதேச அனுபவங்கள். - சி.அ.யோதிலிங்கம்
9. ஈழத்தமிழர் அரசியல் வரலாறு - 1883 தொடக்கம் 1968 வரை (சுருக்க குறிப்புக்கள்) பாகம் - 01 - சி.அ.யோதிலிங்கம்
10. வட கொரியாவும் சர்வதேச அரசியலும் கலாநிதி. கே.ரீ. கணேசலிங்கம்
11. இலங்கை இந்திய ஒப்பந்தமும் தமிழ் மக்களும். சி.அ.யோதிலிங்கம்
12. மலையக மக்களின் அடையாளம் எது? - சி.அ.யோதிலிங்கம்
13. ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் வளர்ச்சிக்கட்டங்கள் - சி.அ.யோதிலிங்கம்
14. 2009 இற்குப் பின்னரான தமிழ் இராஜதந்திரம் - நிலாந்தன்
15. தமிழ்த் தேசியம்! நெருக்கடிகளும், வாய்ப்புக்களும் சி.அ.யோதிலிங்கம்
16. கன்னியாவைப் பாதுகாப்போம் - சி.த. காண்டீபன், சி.கமலகாந்தன், சி.அ.யோதிலிங்கம்
17. இளைய தலைமுறைகளுக்கு ஞாபகங்களை கடத்துங்கள் - நிலாந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.மலையக அரசியல் வரலாற்று வளர்ச்சியும் முன்நகர்த்த வேண்டிய பணிகளும் - சி. அ. யோதிலிங்கம்

19. புதிய அரசியல் கலாச்சாரமே இன்றைய தேவை - சி.அ.யோதிலிங்கம்

20. தமிழ்மொழி புறக்கணிப்புக்கு வயது - 64 - சி.அ.யோதிலிங்கம்

21. கிழக்கு! தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து விலகிச் செல்கிறதா?

-சி.அ. யோதிலிங்கம்

22. இனப்பிரச்சனை என்றால் என்ன? - சி.அ. யோதிலிங்கம்

23. தமிழகமும் ஈழத்தமிழரும் - சி.அ. யோதிலிங்கம்

24.இரண்டாவது குடியரசு யாப்பும் (1978) தமிழ் மக்களும்

-சி.அ. யோதிலிங்கம்

**விலை - ரூபா 30.00**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org